**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No. 450/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : பிரகாஷ் |
| Father/Husband's Name | : பழனி |
| Village | : |
| Taluk | : பொத்தேரி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10.02.2025.

**முதல் விசாரணை—**

நான் தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 25.05.2023 ம் தேதி என்னுடைய First House கம்பெனியில் நான் நைட் ஷிப்ட் வேலை பார்த்துக்கொண்டிருந்த போது, என்னுடைய நண்பர் செந்தமிழ் செல்வன் எனக்கு போன் செய்து, செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் சாலையில் மறைமலைநகர் நகராட்சி எதிரில் சுமார் 8 மணியளவில் என்னுடைய அம்மா, ஷேர் ஆட்டோவிற்காக நின்று கொண்டிருந்தபோது, செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் நோக்கி அதிவேகமாக வந்த பென்ஸ் கார் TN-02-A-0444 வெள்ளைநிற கார் எனது அம்மாவை மோதியது, அதில் எனது அம்மா கிழே விழுந்துவிட்டார் என்றும், என் அம்மாவிற்கு தலை மற்றும் வலது புற இடது புற காலில் அடிப்பட்டது என்றும், அப்பொழுது, அவ்வழியாக வந்த எனது நண்பர் செந்தமிழ் என் அம்மாவை தூக்கி பார்த்துள்ளார் என்றும், அவர் சம்பவ இடத்திலே

இருந்துவிட்டார் என்று எனக்கு தகவல் தெரிவித்தார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்றபோது, என்னுடைய அம்மாவின் உடல் அங்கு இல்லை. அவரின் உடலை 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமணைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக தகவல் கிடைத்து, நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமணை சவக்கிடங்கில் என்னுடைய அம்மாவின் உடலை பார்த்தேன். இது சம்மந்தமாக, காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னுடையது தான். மேற்படி புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை-

என்னுடைய புகாரின் தலைப்பில் தேதி இல்லை என்றால் சரிதான், ஆனால் புகாரின் சங்கதிகளில் உள்ளது. அந்த புகாரில் சம்பவம் நடைப்பெற்ற தேதி மட்டும் தான் உள்ளது என்றும், ஆனால் புகார் என்னைக்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் செந்தமிழ் செல்வன் என்னுடைய அம்மாவை மோதிய காரை பற்றியும் அடிப்பட்ட என் அம்மாவை துாக்கி பார்த்து மருத்துவமணைக்கு அனுப்பிவைத்த விவரங்கள் எதுவும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் இது போல் சங்கதிகள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இந்த சம்பவம் குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. என்னுடைய அம்மா வயதானவர் என்றும், என்னுடைய அம்மாவிற்கு கண்ணில் ஆப்பரேஷன் செய்யப்பட்டுள்ளது, அதனால் அவருக்கு பார்வை சரியாக தெரியாது என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது தேசிய நெடுஞ்சாலை என்றும், அங்கு வாகனங்கள் பிரதானமாக செல்லப்படும் என்றும், என்னுடைய அம்மா வயது முதிர்வின் காரணமாகவும், பார்வை அவருக்கு சரியாக இல்லாத

காரணத்தினால், அவர் சாலை விதிகளை சரியாக கடைப்பிடிக்காமல் ஆபத்தான முறையில் சென்றுள்ளார் என்றார் சரியல்ல. உண்மையிலேவ என்னுடைய நண்பர் அந்த சாலையில் வந்திருந்தால் அவர் எனது அம்மாவை வண்டியில் ஏற்றிக் கொண்டு மருத்துவமணையில் அனுமதித்திருப்பார், அவ்வாறு, அவர் இல்லாததனால்தான் 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது தாயார் மருத்துவமணையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி சாலை விதிமுறைகளை கடைப்பெற்றுள்ளார் என்றும், விபத்து நடந்த பிறகு அடிப்பட்ட எனது தாய்க்கு கடமை உணர்வுடன் அவரை காப்பாற்ற முயற்சியில் ஈடுபட்டார் என்றால் சரியல்ல.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.